


**18. 07. 2025**

**தலைப்பு செய்திகள்**

1. நாட்டில் இளையோருக்கு வேலை வாய்ப்பு வழங்க ஒரு லட்சம் கோடி ரூபாயை மத்திய அரசு விடுவிக்கும் என்று பிரதமர் திரு. நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

2. இளையோருக்கு ஆளுமை வழங்கி படைப்பாற்றல் திறன் சார்ந்த தொழில் நிறுவனங்களை உருவாக்குவதே அரசின் நோக்கம் என்று மத்திய அமைச்சர் திரு.அஷ்விணி வைஷ்ணவ் கூறியுள்ளார்.

3. தமிழ்நாடு தினம் இன்று கொண்டாடப்படுவதை ஒட்டி முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

4. தமிழக சுற்றுலா மேம்பாடு பணிகளை மாநில சுற்றுலாத்துறை அமைச்சர் திரு.ராஜேந்திரன் இன்று ஆய்வு செய்தார்.

5. மெக்சிகோ ஏ.டி.பி. டென்னிஸ் ஆடவர் இரட்டையர் அரையிறுதிக்கு **Anirudh, Reese** இணை முன்னேறியுள்ளது.

**இனி விரிவான செய்திகள்**

********

பிரதமர்

நாட்டில் இளையோருக்கு வேலை வாய்ப்பு வழங்க ஒரு லட்சம் கோடி ரூபாயை மத்திய அரசு அனுமதிக்கும் என்று பிரதமர் திரு. நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

பீஹார் மாநிலத்தில் 7 ஆயிரத்து 200 கோடி ரூபாய் மதிப்பிலான பல்துறை வளர்ச்சி திட்டங்களை இன்று துவக்கிவைத்து பேசிய அவர், கடந்த 11 ஆண்டுகளில்

பிரதமரின் வீட்டு வசதிதிட்டத்தின் கீழ் 4 கோடிக்கும் அதிகமான வீடுகள் கட்டப்பட்டிருப்பதாக எடுத்துரைத்தார்.

ரயில்பாதை, சாலை, ஊரக மேம்பாடு, மீன்வளம், மின்னணு தகவல் தொழில்நுட்ப பிரிவுகளில் இன்று தொடங்கப்பட்ட பல்வேறு திட்டங்களால் பீகார் மக்கள் பயன்பெறுவர் என்று குறிப்பிட்டார்.

4 புதிய அம்ரித் பாரத் ரயில்களின் சேவைகளையும் பிரதமர் தொடங்கிவைத்தார்.

தொடர்ந்து இன்றுமாலை மேற்குவங்க மாநிலம் துர்காபூரில் 5 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான திட்டங்களையும் பிரதமர் துவக்கிவைக்கிறார்.

********

**அஷ்விணி வைஷ்ணவ்**

இளையோருக்கு ஆளுமை வழங்கி படைப்பாற்றல் திறன் தொழில் நிறுவனங்களை உருவாக்குவதே அரசின் தொலைநோக்கு திட்டமாக திகழ்கிறது என்று மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு.அஷ்விணி வைஷ்ணவ் கூறியுள்ளார்.

மும்பையில் இந்திய படைப்பாற்றல் தொழில் நுட்ப உயர்கல்வி நிறுவன வளாகத்தை இன்று துவக்கிவைத்து பேசிய அமைச்சர் இளையோருக்கான புதிய வாய்ப்புகளை இது உருவாக்கும் என்று நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

இந்திய படைப்பாற்றல் திறன் தொழில்நுட்ப நிறுவனத்திற்கு மத்திய அரசு 400 கோடி ரூபாய் ஒதுக்கியிருப்பதை சுட்டிக்காட்டிய அவர் இந்நிறுவனம் படைப்பாற்றல் சார்ந்த 17 சிறப்பு பாட திட்டங்களை தொடங்க இருப்பதாக கூறினார்.

இதன்மூலம் தொழிற்சாலைகள் மற்றும் கல்வி நிறுவனங்கள் பங்களிப்புடன் புதிய வாய்ப்புகளுக்கு வகை செய்யப்படும் என்றும் அவர் எடுத்துரைத்தார்.

கூகுள், மெட்டா, அடோப் போன்ற நிறுவனங்கள் ஏற்கனவே இந்நிறுவனத்துடன் ஒப்பந்தங்களை மேற்கொண்டிருப்பதாகவும் இதனால் பயிற்சிகள் மற்றும் தொழிற்சார்ந்த வாய்ப்புகள் மாணாக்கருக்கு கிட்டும் என்றும் திரு.அஷ்விணி வைஷ்ணவ் எடுத்துரைத்தார்.

இந்நிகழ்வில் பங்கேற்ற மகராஷ்டிர முதலமைச்சர் திரு.தேவேந்திர ஃபெட்னாவிஸ் வரவிருக்கும் வேவ்ஸ் உச்சிமாநாட்டை உலக தரத்திற்கு முன்னெடுத்துச்செல்லும் வகையில் 150 கோடி ரூபாயை தமது மாநிலம் வழங்கும் என்று குறிப்பிட்டார்.

********

**ஐ.என்.எஸ். நிஸ்தர்**

உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட கடற்படையின் ஐ.என்.எஸ். நிஸ்தர் கப்பல்களின் செயலாக்கத்தை பாதுகாப்புத்துறை இணை அமைச்சர் திரு.சஞ்சய்சேத் விசாகப்பட்டிணத்தில் இன்று துவக்கிவைத்தார்.

கடற்படை தளபதி அட்மிரல் தினேஷ் கே திரிபாதி உள்ளிட்டோர் இந்நிகழ்வில் பங்கேற்றனர்.

சர்வதேச தரத்திற்கு இணையாக நவீன கப்பல்களை உருவாக்கும் இந்தியாவின் திறனுக்கு நிஸ்தர் எடுத்துக்காட்டாக திகழ்கிறது என்று அமைச்சர் தெரிவித்தார்.

நிஸ்தர் கப்பல்கள் நீரில் மூழ்கி செயலாற்றும் அதி நவீன தொழில்நுட்பத்துடன் வடிவமைக்கப்பட்டவையாகும்.

120 சிறு குறு தொழில் நிறுவனங்களின் பங்களிப்போடு 80 சதவிகிதம் உள்நாட்டு கருவிகளை கொண்டு சுயசார்பு பாரதத்தை முன்னெடுத்து செல்லும் வகையில் நிஸ்தர் கப்பலை இந்துஸ்தான் கப்பல் கட்டுமான கழகம் வடிமைத்திருப்பது குறிப்பிடத்தக்கது.

********

**கடற்படை ஒத்திகை**

சிங்கப்பூரில் நடைபெற உள்ள 32ஆவது **சிம்பெக்ஸ்** இந்திய - சிங்கப்பூர் கடல்சார் இருதரப்பு ஒத்திகை பயிற்சியில் இந்திய கடற்படையினர் பங்கேற்கின்றனர்.

இந்த வருடாந்திர நீண்ட கடல்சார் ஒத்திகை, இந்தியாவின் தொலைநோக்கு பார்வையான சாகர் மற்றும் கிழக்கு சார் கொள்கையின் அடிப்படையில் பிராந்திய ஒத்துழைப்பையும், கடல்சார் பாதுகாப்பையும் வலுப்படுத்த வழிகோலுகிறது.

கடல்பிராந்தியங்களை பாதுகாப்பாக பராமரிக்க இத்தகைய கூட்டு பயிற்சிகளின் அவசியத்தை எடுத்துரைத்த சிங்கப்பூருக்கான இந்திய தூதர் திரு.**ஷில்பக் அம்புலே,** கடற்கொள்ளை உள்ளிட்ட அச்சுறுத்தல்களை எதிர்கொள்ள இது தேவையாக உள்ளது என்று குறிப்பிட்டார்.

தடையற்ற பாதுகாப்பான வர்த்தக நடைமுறைகளுக்கும், கடல்சார் ஒத்துழைப்பு அவசியமாகிறது என்று கூறிய அவர், அரபிக்கடல் பகுதிகளில் அண்மையில் இந்திய கடற்படையினர் மேற்கொண்ட செயல் திட்ட நடவடிக்கைகள், சர்வதேச அளவில் பாராட்டை பெற்றதாக சுட்டிக்காட்டினார்.

சிங்கப்பூரில் இம்மாத இறுதியில் நடைபெற உள்ள இந்திய கடற்படை பயிற்சி ஒத்திகையில் இந்தியாவின் INS டெல்லி, சாத்புரா, கில்தான், சக்தி, உள்ளிட்ட அதிநவீன போர் கப்பல்கள் பங்கேற்க உள்ளன.

********

**தமிழ்நாடு தினம்**

தமிழ்நாடு தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

இந்நாளை ஒட்டி முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள செய்தியில் தமிழ் கூறு நல்லுலகின் வரலாற்றில் இந்நாள் தனிப்பெரும் நாள் என்று பாராட்டியுள்ளார்.

1967ஆம் ஆண்டு இதே தினத்தில் அப்போதைய தமிழக முதலமைச்சர் C.N. அண்ணாதுரை மெட்ராஸ் மாகாணம் என்ற பெயரை தமிழ்நாடு என்று பெயர்சூட்ட சட்டப்பேரவையில் தீர்மானம் இயற்றியதை நினைவு கூறும் வகையில் இத்தினம் கொண்டாடப்படுகிறது.

********

**ராஜேந்திரன்**

தமிழ்நாட்டின் சுற்றுலா வளர்ச்சி மேம்பாட்டு பணிகளை மாநில சுற்றுலா துறை அமைச்சர் திரு.ராஜேந்திரன் சென்னையில் இன்று ஆய்வு மேற்கொண்டார்.

தென்காசி குண்டாறு அணையில் சாகச சுற்றுச்சூழல் சுற்றுலா,

திருப்பத்தூர் ஏலகிரியில் சுற்றுலா வசதிகளை மேம்படுத்துதல்,

புதுக்கோட்டை முத்துக்கூடா திருவள்ளுர் பூண்டி அணை மேம்பாட்டு பணிகள், உள்ளிட்டவற்றை அவர் ஆய்வு செய்தார்.

மேலும், சுற்றுலா பயணிகளுக்கு தேவையான அடிப்படை கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவது குறித்து அதிகாரிகளிடம் அவர் கேட்டறிந்தார்.

********

**சேகர்பாபு**

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக்கழகம் சார்பில், ஆன்மீக சுற்றுலா பயணிகளின் வசதிக்காக, பிரசித்தி பெற்ற அம்மன் திருக்கோவில்களை தரிசனம் செய்யும் **“ஒரு நாள் ஆடி அம்மன் தொகுப்பு”** சுற்றுலா நிகழ்வை மாநில அமைச்சர்கள் திரு.சேகர்பாபு, திரு. ராஜேந்திரன் ஆகியோர் இன்று சென்னையில் தொடங்கிவைத்தனர்.

இதன்படி சென்னை, மதுரை, திருச்சி, தஞ்சை நகரங்களில் அடுத்த மாதம் 15ஆம் தேதிவரை காலை எட்டரை மணிமுதல் இரவு எட்டரை மணிவரை செவ்வாய், வெள்ளி, ஞாயிற்றுக்கிழமைகளில் சுற்றுலா பேருந்துகள் இயக்கப்படுகின்றன.

********

**மதிவேந்தன்:**

தமிழக ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் கலை இலக்கிய மேம்பாட்டு சங்கம் சார்பில் 2023-24ம் ஆண்டிற்கான சிறந்த எழுத்தாளர்களுக்கான ஊக்கத்தொகை மற்றும் பாராட்டு சான்றிதழ்களை மாநில ஆதிதிராடர் பழங்குடியின நலத்துறை அமைச்சர் திரு.மதிவேந்தன் சென்னையில் இன்று வழங்கினார்.

********

இருவரி

**தமிழ்நாட்டில் பொறியியல் படிப்புகளில் நடப்பாண்டு** மாணாக்கர் சேர்க்கையில் தற்காலிக ஒதுக்கீடு ஆணை பெற்றவர்கள் இன்றுமாலைக்குள் அதனை உறுதி செய்திட வேண்டும் என்று தொழில்நுட்ப கல்வி இயக்குனரகம் அறிவுறுத்தியுள்ளது.

இறுதி ஒதுக்கீட்டு ஆணை நாளை வெளியிடப்படுகிறது.

**தமிழகத்தில் உள்ள 25 நாட்டுப்புற கலை பயிற்சி** மையங்களில் பகுதி நேர கரகம், சிலம்பம், காவடி பயிற்சிகளுக்கான மாணாக்கர் சேர்க்கை இன்று தொடங்குகின்றன.

17 வயதிற்கு மேற்பட்டோர் இதற்கு விண்ணப்பிக்கலாம்.

கலை பண்பாட்டு துறை இணையதளத்தில் இதற்கான விண்ணப்பங்களை பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்.

**கங்கை கொண்ட சோழபுரத்தில் அமைந்துள்ள** அருள்மிகு பிரகதீஸ்வரர் ஆலயத்தில் வரும் 23ஆம் தேதி நடைபெற உள்ள ஆடித்திருவாதிரையை ஒட்டி அரியலூர் மாவட்டத்திற்கு அன்று உள்ளூர் விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கு பதில் வரும் 26ஆம் தேதி வேலை நாளாக இருக்கும் என்று ஆட்சித்தலைவர் திரு.ரத்தினசாமி தெரிவித்துள்ளார்.

**நாமக்கல் மாவட்டத்தில் வேளாண் கண்காட்சி** நாளை நடைபெறுகிறது.

"அங்கக வேளாண் விழிப்புணர்வு" எனும் தலைப்பில் நடைபெற உள்ள இக்கண்காட்சியில் அனைத்து வட்டாரங்களிலிருந்தும் விவசாயிகளை அழைத்து செல்ல பேருந்து வசதிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக ஆட்சித்தலைவர் திருமதி துர்கா மூர்த்தி கூறியுள்ளார்.

**புதுக்கோட்டையில், கந்தர்வகோட்டை,** புதுப்பட்டி அரசு பாலிடெக்னிக் கல்லூரியில் "வேலை வாய்ப்பு முகாம், இளைஞர் திறன் திருவிழா" வரும் 26ஆம் தேதி நடைபெற உள்ளதாக ஆட்சித்தலைவர் திருமதி அருணா தெரிவித்துள்ளார்.

********

**சேலம் வாய்ஸ்:**

மாநில அளவில் பள்ளி மாணாக்கருக்கான கண்டுபிடிப்புகள் போட்டியில் சேலம் மாணாக்கர் முதலிடம் பிடித்துள்ளனர்.

**இதுகுறித்து எமது செய்தியாளர்.**

- **வாய்ஸ்** - -

- ********

**கோவில்**

நெல்லை அருள்மிகு நெல்லையப்பர் காந்திமதியம்பாள் திருக்கோவில் ஆடி முளைக்கட்டு திருவிழா இன்று கொடியேற்றத்துடன் தொடங்கியது.

**இதுகுறித்து எமது செய்தியாளர்**

**வாய்ஸ்**

********

**டென்னிஸ்**

**மெக்சிகோவில்** நடைபெறும் ஏ.டி.பி. டென்னிஸ் ஆடவர் இரட்டையர் அரையிறுதிக்கு இந்தியாவின் **Anirudh,** அமெரிக்காவின் **Reese** இணை முன்னேறியுள்ளது.

காலிறுதியில் இந்த இணை – மெக்சிகோவின் **Manuel,** ஆஸ்திரேலியாவின் **Bernard** இணையை 7-5 6-1 என்ற நேர் செட்களில் இன்று வென்றது.

********

**செஸ்**

லாஸ்வேகசில் நடைபெறும் Freestyle கிராண்ஸ்லாம் செஸ் ஆடவர் அரையிறுதிக்குள் இந்தியாவின் **Arjun Erigaisi** நுழைந்துள்ளார்.

காலிறுதியில் உஸ்பெகிஸ்தானின் Nodirbek-கை அதிரடியாக தோற்கடித்து அவர் அரையிறுதிக்கு முன்னேறினார்.

********

**இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது**